செ.வெ.எண்-655

# செய்தி வெளியீடு

தேதி: 10.12.2015

மாண்புமிகு புரட்சி தலைவி இதய தெய்வம் தமிழ்நாடு முதலைமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு ஊரகத்தொழில் மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு ப. மோகன் அவர்கள் சென்னை திரு.வி.க. தொழிற்பேட்டையிலுள்ள அனைத்து தொழில் நிறுவனங்களை இன்று (10.12.2015) பிற்பகல் 2.00 மணியளவில் பார்வையிட்டார். அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதாவது.

- தொழிற்பேட்டைகளிலுள்ள மழை நீர் முழுவதும் அகற்றப்பட்டுவிட்டது
- தொடர்ந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது
- குப்பைகள், சேறு மற்றும் சகதிகள் முழுவதும் அகற்றப்பட்டுவிட்டது

09.11.2015 முதல் தமிழகத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள தொழிற்பேட்டைகள் கடுமையாகவும் கடலூர், தஞ்சாவூர் , புதுக்கோட்டை, கிருஷ்ணகிரி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள தொழிற்பேட்டைகள் குறிப்பிடத்தக்க அளவுக்கும் வெள்ளநீர் சூழப்பட்டு இயந்திர தளவாடங்கள் , மின்சாரம் விநியோகம் மற்றும் அடிப்படை வசதிகள் பாதிக்கப்பட்டன. மாண்புமிகு ஊரகத்தொழில் மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.ப. மோகன் அவர்களின் கள ஆய்வுக்குப்பின்னர் இந்த தொழிற்பேட்டைகளில் சகஜநிலை திரும்பத் தேவையான

நடவடிக்கைகள் போர்கால வேகத்தில் எடுக்கப்பட்டதால் வெள்ள நீர் வெளியேற்றப்பட்டு தடைப்பட்டிருந்த மின் விநியோகம் சீர் செய்யப்பட்டது.

09.11.2015 முதல் பெய்து வந்த கன மழையைத் தொடர்ந்து 01.12.2015 அன்று செம்பரம்பாக்கம் ஏரி , அம்பத்தூர் ஏரி , நேமம் ஏரி மற்றும் பல ஏரிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட உபரி நீர் அருகிலுள்ள கிண்டி, அம்பத்தூர், திருமுடிவாக்கம், திருமழிசை மற்றும், விச்சூர் தொழிற்பேட்டைகளில் பாய்ந்து 01.12.2015 அன்று மேற்கண்ட தொழிற்பேட்டைகளில் 4 அடி முதல் 10 அடி வரை வெள்ள நீர் தேங்கி பெரும்பாலான தொழிற்சாலைகளிலும் புகுந்தது. இதனால் மின் விநியோகம் முழுவதுமாக தடைப்பட்டது. தொழிற்சாலைகளில் இருந்த இயந்திர தளவாடங்கள் நீரில் மூழ்கி பாதிப்படைந்தன. குடியிருப்புகள் மூழ்கின. தொழிற்பேட்டைகளில் உள்ள மழைநீர் வடிகால் வழிகள் நவம்பர் மாதம் தூர்வாரப்பட்டு , சுத்தம் செய்யப்பட்டிருந்தபடியால் 03.12.2015 , 04.12.2015 ஆகிய இரு நாட்களில் வெள்ளம் முழுவதுமாக வடிந்துவிட்டது. மின்சார விநியோகம் சீரமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொழிற்சாலையின் உள்புறமும் மின் இணைப்பு சாதனங்களை பரிசோதித்து, மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது தொழிற்பேட்டைகளில் மழை வெள்ளநீருடன் அடித்து வரப்பட்ட குப்பை மற்றும் சேறினை அகற்றும் பணிகள் ஜே.சி.பி மற்றும் லாரிகள் மூலம் அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மொத்தம் 28 தொழிற்பேட்டைகளில் மழை வெள்ளத்தால் சேதமடைந்துள்ள சாலைகள், மின் விளக்குகள் , வடிகால்கள், குடியிருப்புகள் ஆகியவற்றை சீரமைக்க வேண்டி ரூ.83 கோடி வெள்ள நிவாரண நிதி வழங்குமாறு அரசிடம் சிட்கோ நிறுவனம் விண்ணப்பித்துள்ளது.

இதுவரை கிண்டி, அம்பத்தூர் ெழிற்பேட்டைகளில் இருந்து மட்டும் சுமார் 75 விழுக்காடு அளவு ( 80 லாரி லோடுகள்) குப்பை அகற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள குப்பைகள் இன்னும் 2 நாட்களில் முற்றிலுமாக அகற்றப்படும் . குப்பைகள் அகற்றப்பட்ட பகுதிகளில் கொசு மருந்து அடித்தல், பிளீச்சிங் பவுடர் தெளித்தல் ஆகிய சுகாரதாரப்பணிகள் நடந்து வருகின்றன, அனைத்துத் தொழிற்பேட்டைகளிலும் மின் விநியோகம் வழங்கப்பெற்று வருகிறது. மின் தொடர்பு பரிசோதிக்கப்பட்டு, சேறு மற்றும் சகதி நீக்கப்பட்ட தொழிலகங்கள் இயங்க ஆரம்பித்துள்ளன. அந்த தொழிற்சாலைகளின் தொழிலாளர்களும் வழக்கம்போல் பணிக்குத்திரும்ப ஆரம்பித்துள்ளனர் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். அப்போது சிட்கோ நிறுவன தலைவர் திரு.ஜே.சி.பி பிரபாகர், எம்.எல்.ஏ, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறை முதன்மை செயலாளர் திரு. ஜெக்மோகன் சிங் ராஜு , இ.அ.ப. மற்றும் துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9